1973 மார்ச் 27]

இரண்டு செயல்படத் தொடங்கியதால், வழங்கல் நிலைமை கணிசமான அளவு சீரடைந்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அளவு சாராயம் கிடைக்கக்கூடிய முறையில் ஒரு தொழிற்சாலையை பப்ளிக் செக்டாரிலே ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இப்பொழுதே இரண்டு புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதைத் தயாரிப்பதற்கு அடிப்படைத் தேவை மொலாஸஸ்தான். அதை அடிப்படையாக வைத்துத்தான் தொழிற்சாலைகள் துவக்கப்படவேண்டும். அரசு இப்பொழுது ஆரம்பிப்பதாக உத்தேசம் கிடையாது.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்ட நிலம்

* 527 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குத் தியாகி நிலமாகக் கொடுக்கப்பட்டுள்ள நிலம் எத்தனை ஏக்கர்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 12,186.56 ஏக்கர்.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட வீரர்களுக்கு நிலங்கள் மானியமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி மானியமாக அளிக்கப்பட்ட நிலங்களை சில பேர்கள் விற்கிறார்களே, அப்படி விற்றால் அவற்றைப் பறிமுதல் செய்வதற்கோ அல்லது வேறு நடவடிக்கை எடுப்பதற்கோ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதை இத்தனை ஆண்டுகளுக்குள் விற்கக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறது. விற்று இருந்தால் அரசு நடவடிக்கை எடுத்திருக்கும். விற்றிருக்கிறார்கள் என்று புகார் கொடுத்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.